
# கல்வெட்டு

இதழ் 23 ★ சுக்கில ஆண்டு ஆவணித் திங்கள் ★ விலை ரூ. 1-50



காலாண்டு இதழ் (1989, ஆகஸ்டுத் திங்கள்)
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

உள்ளே......


பக்கம்

1 சம்புவராயர் (ஓர் அறிமுகம்) 1

2 சம்புவராயர் பற்றிய கல்வெட்டு, இலக்கிய ஆதாரங்கள்
—நடன. காசிநாதன் 3

3 சம்புவராயர் மாவட்டத்தில் சமண சமயம்
—கி. ஸ்ரீதரன் 7

4 திருத்தாமரைப்பாக்கம்—கு. தாமோதரன் 18

5 சம்புவராயர் மாவட்டத்தில் தொல்பழங்கால வரலாறு
—சீ. வசந்தி 24

6 பேரரசை உருவாக்கும் சிற்றரசு—ஆ. பத்மாவதி 27

7 சம்புவராயர் குறித்த ஓர் சுவடி
—எஸ். சௌந்தரபாண்டியன் 32

8 திருவக்கரைக் கோயிலில் சம்புவராயர் திருப்பணிகள்
—வெ. இராமமூர்த்தி 35


அட்டைப் படம் :
சம்புவராயர்களின் அரசுச் சின்னம்

# ச ம் பு வ ரா ய ர்

(ஓர் அறிமுகம்)

சம்பு + அரையர் = சம்புவரையர் என்று ஆகி பின்னாளில் சம்புவராயர் என்று மருவியுள்ளது. சம்பு என்பது சம்பு குலத்தையும், அரையர் என்பது தலைமைத் தன்மையையும் காட்டி நிற்கும். சம்பு முனிவரின் வழி வந்தவர்கள் சம்புவரையர் என்று கூறப்படுகிறது.

சம்புவரையர்களைப் பற்றி கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் கல்வெட்டுக்களில் முதன் முதலில் அறிய முடிகிறது. அப்பொழுது படைத் தலைவர்களாகவோ, அல்லது யாதேனும் அரசு அதிகாரிகளாகவோ இருந்திருக்கின்றனர். கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் குறுநில மன்னர்கள் அளவுக்கு உயர்ந்திருக்கின்றனர். இவர்கள் சிறு சிறு பகுதியை ஆட்சி புரிந்ததையும்; அவர்கள் பிற குறுநில மன்னர்களோடு உடன்படிக்கைகள் (நிலைமைத்திட்டு) செய்து கொண்டதையும் பல கல்வெட்டுக்களில் காணமுடிகிறது.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தனித்து அரசு ஆளும் தகுதியைப் பெற்றுவிட்டனர். எந்தப் பேரரசுக்கும் கீழ்ப்படிந்து இல்லாத நிலையை எய்திவிட்டனர் கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டளவில் தம் வலிமை குன்றி மீண்டும் குறுநிலத் தலைவர்களாகவோ அல்லது அரசு அதிகாரிகள் அளவுக்கோ தாழ்ந்துவிட்டனர்.

இவர்கள் தனித்து ஆட்சி செய்த காலங்களில் இம்மன்னர்களின் கொடைத்தன்மையைப் புலவர்கள் புகழ்ந்து பாராட்டியுள்ளனர். இவர்கள் தொடக்கக் காலத்தில் தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம் பகுதியில் உள்ள முஞ்ஞூறு என்னும் பகுதியில் இருந்ததாகத் தெரிகிறது. அப்பொழுது ஒய்மானாடான விஜய ராஜேந்திர வளநாட்டு முஞ்ஞூற்றுக் குடிப்பள்ளி செங்கேணி அம்மையப்பன் பாண்டியான நரலோக விழுப்பரையன் என்னும் ஒருவன் இருந்திருக்கிறான். பிறகு வடார்க்காடு மாவட்டத்தில் படைவீடு பகுதியில், தம் ஆட்சிக்குக் கால்கோளிட்டு சிறுகச்சிறுக தம் வலிமையைப் பெருக்கி ஆட்சி எல்லையையும் பெருக்கிக் கொண்டனர். கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டுகளில் தற்காலத்திய வடார்க்காடு,

தென்னார்க்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டப் பகுதிகளின் எல்லை வரை தங்கள் ஆட்சிப் பரப்பை விரிவாக்கிக் கொண்டனர். 'படைவீட்டு இராச்சியம்' என்றே ஒரு தனிப் பெயர் கொண்டு ஆளத் தொடங்கிவிட்டனர்.

சம்புவராயர்கள் குறுநில மன்னர்களாக இருக்கையில் முதலில் சோழருக்கும் பின்னாளில் பாண்டியருக்கும் துணையாக இருந்து போர்க் காலங்களில் உதவி புரிந்தனர். சோழர்களின் ஆதிக்கம் தாழத் தொடங்கியபோது சோழர்களின் ஆட்சியை நிலை நிறுத்த போர்முகத்தில் அணிவகுத்துச் சென்றதோடு, சிறந்த தவ வலிமை கொண்ட முனிவர்களைக் கொண்டு வேள்வி வேட்டலையும் செய்தனர். இருப்பினும், சோழர் ஆட்சி நிலைகுலைந்து பாண்டியர் ஆட்சி தலைதூக்கியபோது பிற குறுநில மன்னர்களைப் போன்றே இவர்களும் சுய ஆட்சி நிறுவ முற்பட்டு வெற்றியும் பெற்றனர். காடவரையர், கங்கரையர், சேதிராயர், வாணாதிராயர் போன்றே இவர்களும் தமிழகத்தின் ஒரு பகுதியில் தன்னாட்சி செய்யத் தொடங்கினர்.

இவர்கள் ஆட்சியிலும் தமிழகம், பேரரசுகளின் காலத்தில் பெற்ற எல்லா நன்மைகளையும் பெற்றிருக்கிறது. சமயம் தழைத் தோங்கி வளர்ந்திருக்கிறது. குடிமக்கள் அமைதியான வாழ்வைப் பெற்றிருந்திருக்கிறார்கள். நாட்டில் சமயப் பொறை நிலவி யிருக்கிறது.

கலைகள் வளர்ந்திருக்கின்றன. கட்டடக் கலை, சிற்பக் கலை, நாட்டியம், இசை, இலக்கியம் ஆகிய அனைத்துமே சிறப்பெய்தியிருக் கின்றன. பல ஆலயங்கள் புதிதாகவும் எழுப்பப்பட்டிருக்கின்றன. புதுப்பித்தலும் நிகழ்ந்திருக்கின்றன. வைதீகச் சடங்குகளும் பாது காக்கப்பட்டு வந்திருக்கின்றன. இவர்களில் சில மன்னர்கள் தங்களை "வன்னிய நாயன்" என்றும் "கண்டர் சூரியன்" என்றும் "சிவாலய சந்தோழன்" என்றும் அழைத்துக்கொண்டனர்.

விஜயநகர மன்னர் முதலாம் புக்கனின் மகன் குமார கம்பணன் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின் மீது படையெடுத்து சம்புவராயர்களைத் தோற்கடித்திருக்கிறான். அதற்குப் பிறகு சம்புவ ராயர் தன்னாட்சி செய்வதினின்றும் தாழ்ந்து குறுநில மன்னராகவோ அல்லது அரசு அதிகாரிகளாகவோ வாழ்ந்திருக்கிறார்கள். ஃ

# சம்புவராயர் பற்றிய கல்வெட்டு, இலக்கிய ஆதாரங்கள்

நடன. காசிநாதன்
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28.

சம்புவராயர் வரலாறு எழுதுவதற்கு ஆதாரங்களாகக் காணப் படுபவை பெரும்பாலும் கல்வெட்டுக்களேயாகும். அதற்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கத்தக்கவை விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில இலக்கியங்கள். இவ்விலக்கியங்களை இருவகையாகப் பிரிக்கலாம். 1. தமிழ் இலக்கியங்கள் 2. வடமொழி இலக்கியங் கள் என்பதாக. பிற குல அரசர்களைப் பற்றி எழுதப்பட்டுள்ள வரலாற்று நூல்களில் சம்புவராயர்களைப் பற்றித் தெரிவிக்கும் குறிப்புக்களை மூன்றாம் இனமாகக் கொள்ளலாம்.

கல்வெட்டு ஆதாரங்களைப் பொறுத்த மட்டில், கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 14-ஆம் நூற்றாண்டு வரை, விரிவான, உண்மையான ஆதாரங்களை வழங்குகின்றன என்று உறுதியாக நம்பலாம். ஏனெனில் இவைகள் தெரி விக்கும் குறிப்புக்களை இலக்கியங்களும், பிற குல அரசர்களின் கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் உறுதி செய்கின்றன. சம்புவ ராயர்களைப் பற்றித் தெரிவிக்கும் கல்வெட்டுக்கள் கிட்டத்தட்ட 200-க்கும் மேற்பட்டவை கண்டுபிடிக்கப்பட்டு படியெடுக்கப் பட்டுள்ளன. சம்புவராய மன்னர்களால் வெளியிடப்பட்ட கல்வெட்டுக்களும், சம்புவராயர்களைக் குறிக்கும் பிற குல மன்னர் களின் கல்வெட்டுக்களும் இதில் அடங்கும். இக்கல்வெட்டுக்கள், சம்புவராயர்கள் பிற குல மன்னர்களுக்கு அடங்கி இருந்தமையையும், பின்னர் சுய ஆட்சி பெற்றதையும், தங்கள் சுய ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டிருந்த அரசியல் மாற்றம், சமுதாய மாற்றம், பொருளாதார மாற்றம், கலைப் பணி ஆகியவைகளையும் புலப்படுத்துகின்றன.

சோழ மன்னன் விக்கிரம சோழனின் 3-ஆம் ஆட்சி ஆண்டிலிருந்து (கி.பி. 1120) மூன்றாம் இராஜராஜன் ஆட்சிக் காலம் வரையிலும் சம்புவராயரைப் பற்றிய கல்வெட்டுக்கள்

உள்ளன. காடவர்கோன் கோப்பெருஞ்சிங்கன், பாண்டிய மன்னன் குலசேகரன், மாறவர்மன் வீரபாண்டியன், ஜடாவர்மன் சுந்தர பாண்டியன், தெலுங்குச் சோடமன்னன் வீரகண்ட கோபாலன், விஜயகண்ட கோபாலன், விஜயநகர மன்னன் குமார கம்பணன், அவரது மகன் ஒம்மண உடையார் ஆகியோர் காலத்தியக் கல்வெட்டுக்களிலும் இவர்கள் குறிக்கப்படுகின்றனர். சம்புவராய மன்னர்கள் காலத்தியச் செப்புப் பட்டயம் யாதாவது கிடைத் திருப்பின் இவர்களது வழி முறையைப் பற்றி தெளிவாக அறிந்து கொள்ள முடிந்திருக்கும்.

இலக்கிய ஆதாரங்களில் குறிப்பிடத்தக்கவை விஜயநகர மன்னன் குமார கம்பணன் பட்டத்தரசியாகிய கங்காதேவி இயற்றிய 'மதுரா விஜயம்' என்னும் இலக்கியமாகும். அருமையான கவிதை நடையில், வடமொழியில் எழுதப்பட்டுள்ளது. குமார கம்பணனின் தமிழகப் படையெடுப்புப் பற்றி விளக்குகிறது. விஜயநகர வேந்தனின் படை வலிமை, கச்சியைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டு வந்த சம்புவராயர்களின் கோட்டை அமைந்திருந்த விதம், அவர்களது ஆட்சிப் பரப்பு, அவர்களை வெல்ல வேண்டிய அவசியம், வெற்றிபெற்ற பின் மதுரை நோக்கிப் படை சென்றமை, இசுலாமியர் களை வென்ற முறை ஆகியவை வெகு சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. சம்புவராயர்களின் தலைமை இடம், கோட்டை ஆகியவை பற்றி இவ்விலக்கியத்தின் வாயிலாகத்தான் அறிய முடிகிறது.

இராஜநாத திண்டிம கவி எழுதிய 'சாளுவாப்யுதயம்', மற்றும் சாளுவ நரசிம்மர் எழுதிய 'ராமாப்யுதயம்' ஆகிய நூல்களிலும் சம்புவராயர் பற்றிய சில குறிப்புக்களைப் பெற முடிகிறது. விஜயநகர மன்னர்களின் தலைமையை ஏற்று உதயகிரிக் கோட்டைப் பகுதியை ஆட்சி செய்து வந்த சாவண்ண உடையாரின் தளபதியான மங்கு என்பவர் சம்புவராயர்களை வென்று, பின்னர் அவர்களையே ஆளும்படி அருளிச் செய்ததால் 'சம்புவராய ஸ்தாபனாச்சார்யர்' என்ற பட்டம் தரித்திருந்தார் என்று மேற் காணும் இரு நூல்களும் தெரிவிக்கின்றன.

பில்லலாமற்றி பிணவீரபத்ருடு என்னும் புலவர் இயற்றிய ''ஜைமினி பாரதம்'' என்னும் நூல் மங்குவின் தமிழகப் படையெடுப்பு பற்றி விரிவாகக் குறிப்பிடுகிறது.

திக்கண சோமயாஜி எழுதிய நூலான "நிர்வசனோத்தர இராமாயணம்" என்னும் நூல் தெலுங்குச் சோட மன்னன் இரண்டாம் மன்மசித்தியின் தந்தையாரின் வீரச் செயல்களை விவரிக்கையில் சம்புவராயர் போன்ற மண்டலீகர்களை வென்றதைப் புலப்படுத்துகிறது.

சம்புவராயர்களைப் பற்றி ஓரளவுக்குச் சில விவரங்களைத் தரும் தமிழ் இலக்கியம் 'ஏகாம்பரநாதர் உலா'வாகும். இவ்வுலாவை இரட்டைப் புலவர்கள் பாடியுள்ளனர். இந்நூல் காஞ்சிபுரத்து ஏகாம்பரநாதர் மீது பாடப்பட்டதாகும். ஏகாம்பரநாதருக்கு அப்பொழுது காஞ்சிபுரத்தை ஆண்டு வந்த மல்லிநாத சம்புவராயன் என்னும் மன்னன் மணிமகுடம், தேர், துலாமண்டபம் ஆகியவை செய்தளித்ததைக் குறிப்பிடுகிறது.

கம்பரால் எழுதப்பெற்றது என்று கருதப்படும் 'சிலை எழுபது',

"வளமருவு மங்கையர் கோன் சொலத்தகு பல்
லவராயன் மரபிற் றோன்றி
களமருவு கறையுடைய கண்ணுதல்கச்
சியின் வாழேகாம்ப ரேசற்
குளமருவு மன்பினரா யொளிர் மகுட
மணிபொற்றே ருதவி மேனாள்
தளமருவு தாமரைபொன் முகவனியர்
படைத்த புகழ் சாற்றற் பாற்றே

என்று ஏகாம்பரநாதருலாவில் கூறப்படும் அதே கருத்து இங்கும் கூறப்பட்டுள்ளது. இதில் உள்ள சிறப்பு யாதெனில், ஏகாம்பர நாதருலாவில் சம்புவராய மன்னர் ஏகாம்பரநாதருக்கு மணிமுடியும், பொற்றேரும் அளித்தான் என்று கூறப்பெற்றிருப்பது, சிலையெழு பதில் பல்லவராயர் மரபில் வந்த முன்னாள் வன்னியர் தந்தனர் என்று கூறப்பெற்றிருப்பது ஆகும். இதன் மூலம் சம்புவராயர், பல்லவரையர் வழிவந்தவர் என்பது தெரியவருகிறது.

சென்ற நூற்றாண்டில் மெக்கன்சி என்னும் ஆங்கிலேய அதிகாரி தமிழகத்தின் ஊர்கள் தோறும் சில செய்திகளைத் திரட்டியுள்ளார். அவ்வாறு திரட்டப்பட்ட ஒவ்வொரு செய்தியும் கைபீது என்று

வழங்கப்படுகிறது. ''வயலூரில் ஆதிநாராயண சம்புவராயருடைய புராதனக் கோட்டை யென்றதுகள் விசேஷித்த கைபீது'' என்று ஒரு ஹைபீது உள்ளது. அதில் வீரநாராயண சம்புவராயன் கோட்டை கட்டிக்கொண்டு, தேசங்களைக் காத்து, தேவாலயங்களுக்குத் திருப்பணி முதலானதுகளை நடப்பித்தது குறிக்கப்பட்டுள்ளது. தலைப்பில் ஆதிநாராயணனென்றும், செய்தி கூறுமிடத்து வீர நாராயணனென்றும் காணப்படுகிறது. இராஜ நாராயண சம்பு வராயனைத்தான் இதில் வீரநாராயண சம்புவராயனென்றும், ஆதி நாராயண சம்புவராயனென்றும் குறிப்பிடப்படுகிறது என்று கருதலாம்.

சம்புவராயர் வரலாற்றை இதுவரை யாரும் தொகுத்து ஒரு தனி நூலாக எழுதவில்லை. அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் டாக்டர். ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தம்முடைய 'விஜயநகர ஆட்சியில் தமிழகம்' என்னும் நூலில் சம்புவராயர்களைப் பற்றி ஒரு இயல் (Chapter) எழுதியுள்ளார். கங்காதேவியால் எழுதப்பெற்ற 'மதுரா விஜயம்' என்ற நூலை ஆராய்ச்சிக் குறிப்பு களோடு வெளியிட்ட திரு. என். வேங்கடாச்சாரி அவர்கள் சம்பு வராயர்களைப் பற்றி நூலின் முற்பகுதியில் முன்னுரையாகக் குறிப்பிட்டுள்ளார்.

டாக்டர். சி. ஆர். சீனிவாசன் அவர்கள் ''காலந்தொறும் காஞ்சிபுரம்'' (Kanchipuram through the ages) என்னும் தம் நூலில் 'சம்புவராயர் ஆட்சியில் காஞ்சிபுரம்' என்று ஒரு இயலைச் சேர்த்துள்ளார். டாக்டர். கே. வி. இராமன் அவர்கள் வரதராஜப் பெருமாள் என்னும் தம் நூலில் சம்புவராயர் கல்வெட்டுக்கள் சிலவற்றையும் தொகுத்து அளித்துள்ளார்.

திரு. என். சேதுராமன், 'கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் சம்புவராயர்' என்று ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இக்கட்டுரையில் சம்புவராய மன்னர்கள் சிலரது ஆட்சிக் காலத்தை வரையறை செய்துள்ளார்.

ஆதலால் சுமார் 200-க்கும் மேலான கல்வெட்டுக்களிலும் சில இலக்கியங்களிலும் குறிக்கப்பெறும் சம்புவராயர்களைப் பற்றி தெளிவான ஒரு முழு நூல் எழுத வேண்டுவது அவசியமாகிறது.

# சம்புவராயர் மாவட்டத்தில் சமண சமயம்

கி. ஸ்ரீதரன், எம்.ஏ.,
பதிவு அலுவலர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28

பண்டைக் காலத்தில் தமிழகத்தில் பரவியிருந்த சமயங்களில் சமண சமயமும் ஒன்றாகும். சுமார் கி.மு. நான்காம் நூற்றாண்டுக்கு முன்பே தமிழகத்தில் பரவத் தொடங்கிவிட்ட சமண சமயத்தைத் தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் போற்றியதன் காரணமாக நாடெங்கும் சமணக் கோயில்களும் திருமேனிகளும் உருவாக்கப்பட்டன.

சமண சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்கு அவ்வப்போது உலகத்தில் ஆன்றோர்கள் தோன்றுவார்கள் என்பது சமண சமயத்தின் நம்பிக்கை. அவ்வாறு தோன்றியவர்கள் தெய்வமாகவும் வழிபடப்பெற்றனர். அவர்களுக்குத் தீர்த்தங்கரர் எனப் பெயரிட்டு அழைத்தனர். தீர்த்தங்கரர் உருவச் சிலைகளின் இரு பக்கங்களிலும் சாமரம் வீசும் தேவர்களின் உருவங்களும். மத்தியில் தலைக்குமேலே ஒன்றன்மேல் ஒன்றாக மூன்று குடைகளும் காணப்படும்.

''திங்கள் மூன்றடுக்கிய திகழ் முக்குடைக் கீழ் செங்கதிர்
ஞாயிற்றுத் திகழொளி சிறந்து கோதை தாழ்பிண்டிக்
கொழு நிழலிருந்த ஆதியிற் றோற்றத்து அறிவனை வணங்கி''

என இளங்கோவடிகள் தன் பாடலில் போற்றுகின்றார்.

சமணக் கோயில்களும், சமணத் திருமேனிகளும் தமிழகத்தின் பல மாவட்டங்களில் காணப்படுகின்றன. சமணக் கோயில்கள் 'பள்ளிகள்' என அழைக்கப்பட்டன. இக்கோயில்களுக்குத் தானமாக அளிக்கப்பட்ட நிலம் 'பள்ளிச்சந்தம்' என அழைக்கப்படுகிறது. சம்புவராயர் மாவட்டத்தில் திருமலை, சேவூர், திருவோத்தூர், திருப்பனப்பூர், வள்ளிமலை ஆகிய ஊர்களில் சமணக் கோயில்களும் சிற்பங்களும் காணப்படுகின்றன.

சமணத் துறவிகள் மலைகளில் இயற்கையாக அமைந்த குகைகளில் தங்கினர். அவை எளிதில் அடைய முடியாத இடத்திலும் இயற்கையாக அமைந்த சுனைகளின் அருகிலும் உள்ளன. மன அமைதியுடன் இருக்க இத்தகைய சூழ்நிலைகளை விரும்பி அவர்கள் அங்கு வாழ்ந்திருக்கின்றனர். அவர்கள் குகைகளின் உட்புறத்தில் தங்குவதற்கு ஏற்ப அரசர்களும், வணிகர்களும் அப்பகுதியைச் சீர்செய்து படுக்கை அமைத்துத் தந்தனர். அவ்வாறு செய்து அளித்த செய்தியை அப்படுக்கையின் மேலும், குகையின் முகப்பிலும், கல்வெட்டுக்களாகப் பொறித்தனர். இப்படுக்கைகள் 'பாழி' என்றும் 'பஞ்சபாண்டவர் படுக்கைகள்' என்றும் அழைக்கப் படுகின்றன. இத்தகைய படுக்கைகள் தமிழகத்தின் பல குன்றுகளில் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டில் அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் சமண சமயம் பரவியிருந்திருந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன. வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில்தான் சமண சமயத்தைச் சார்ந்தவர்கள் இன்றும் அதிகமாக உள்ளனர். இம் மாவட்டத்தில் சமண சமயக் கோயில்கள் அதிகமாகக் காணப் படுகின்றன.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்து கி பி. இரண்டாம் நூற்றாண்டு இறுதி வரையில் சுமார் 500 ஆண்டுகளுக்கு மேலாகச் செல்வாக்குடன் திகழ்ந்த சமண சமயம் உருவ வழிபாட்டைப் பின்பற்றியதாகத் தெரியவில்லை. அக்காலக் கல்வெட்டுகள் இருக்கின்ற பகுதிகளிலே சமண உருவங்கள் ஏதும் காணப்படவில்லை.

பின்னர் ஆட்சிக்கு வந்த பல்லவ மன்னர்கள் காலத்தில்தான் சமணச்சிற்பங்கள் காணப்படுகின்றன. சம்புவராயர் மாவட்டத்தில் சமணக் கோயில்களும் சிற்பங்களும் கீழ்க்கண்ட இடங்களில் அமைந்துள்ளன.

| வட்டம் : | ஊர் : |
| --- | --- |
| 1 செய்யாறு | 1. மாமண்டூர் |
| | 2. கரந்தை (திருப்பனம்பூர்) |
| | 3. திருவோத்தூர் |

| | | |
|---|---|---|
| 2 | வந்தவாசி | 1. பொன்னூர் |
| | | 2. பஞ்சபாண்டவர் மலை (திருப்பான்மலை) |
| | | 3. சளுக்கி |
| | | 4. இளங்காடு |
| | | 5. வெண்குன்றம் |
| | | 6. கீழ்சாத்தமங்கலம் |
| | | 7. சீயமங்கலம் |
| | | 8. விடால் |
| | | 9. தேசூர் |
| | | 10. தெள்ளாறு |
| | | 11. திரக்கோல் |
| 3 | ஆரணி | 1. பூண்டி |
| | | 2. சேவூர் |
| 4 | போளூர் | 1. ஒத்தலவாடி |
| | | 2. குன்னத்தூர் |
| | | 3. திருமலை |
| 5 | திருவண்ணாமலை | 1. வழுதலங்குணம் |

## செய்யாறு வட்டம்

### மாமண்டூர்

காஞ்சிபுரத்துக்கு அருகில் சுமார் **15** கி.மீ. தொலைவில் வந்தவாசி செல்லும் சாலையில் மாமண்டூர் என்ற சிற்றூர் உள்ளது. அதைத் 'தூசி மாமண்டூர்' என்றும் அழைப்பார்கள். அவ்வூரின் அருகே உள்ள குன்றில் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்தில் குடைவிக்கப்பட்ட மூன்று குடைவரைக் கோயில்கள் உள்ளன. அதன் அருகில் இயற்கையான குகைத்தளம் ஒன்று உண்டு.

கல்வெட்டு :

"கணிமான்தேனூர் தந்த கோன் குன்று
செயிதான் தசன் சிறு(வ்)வன்"

கற்படுக்கைகளைச் சமணத் துறவிகளுக்காகச் செய்து தந்தவனின் பெயரை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. கல்வெட்டு கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது.

## திருவோத்தூர்

சமண சமயத்தார் வாழ்ந்த தலங்களுள் இதுவும் ஒன்றாகும். ஒரு சைவர் வளர்த்த பனை மரங்கள் யாவும் ஆண் பனையாகப் போவதைக் கண்டு இவ்வூர்ச் சமணர் ஏளனம் செய்ய அதனைப் பொறுக்காத சைவர் அவ்வூர் வந்த ஞானசம்பந்தரிடம் கூற அவர் பதிகம் பாடி ஆண் பனைகளைப் பெண் பனைகளாகச் செய்தார் என்று பெரியபுராணம் கூறுகிறது. இவ்வூருக்கு அருகில் உள்ள புனாவதி என்னும் கிராமத்தில் முன்பு சமணக்கோயில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இவ்வூரில் சமணச் சிற்பங்கள் இன்றும் காணப்படுகின்றன.

## திருப்பனம்பூர்

காஞ்சிபுரத்திலிருந்து 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூருக்குக் 'கரந்தை' என்றும் பெயர் வழங்கப்படுகிறது. இங்குள்ள சமணக் கோயிலுக்கு முனிகிரி ஆலயம் என்று பெயர். இக்கோயிலில் உள்ள பழைய ஆலயம் ஒன்று சமவசரணம் போன்று அமைந்துள்ளதாகக் கூறுகின்றனர். கோயிலில் பல்லவ மன்னர், சோழ மன்னர்கள், விஜயநகர மன்னர்கள் காலக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கோபுரத்தில் மூன்றாம் நந்திவர்மனது கல்வெட்டு காணப்படுகிறது. அதிட்டானத்தில் உள்ள வீரராசேந்திரன் கல்வெட்டில் ஊர்ச் சபையைச் சேர்ந்த மூவர் சமணக் கோயிலுக்குத் திருவிழா நடத்தத் திருவிழாப்புறமாக நிலம் அளித்திருக்கிறார்கள். முதற் குலோத்துங்கன் கல்வெட்டு இவ்வூரைத் 'திருப்பரம்பூர்' என அழைக்கிறது. பிற்காலச் சோழர் கல்வெட்டில் இக்கோயில் 'வீரராசேந்திரப் பெரும்பள்ளி' என அழைக்கப்படுகிறது.

வீரராசேந்திர பெரும்பள்ளி அருக தேவர்க்கு விளக்கு தானம் அளிக்கப்பட்டதாக ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. கோப்பெருஞ்சிங்கன் மற்றும் தெலுங்குச் சோழனான விஜயகண்ட கோபாலன் ஆகியோரது கல்வெட்டுக்களும் உள்ளன. கிருஷ்ணதேவராயர் காலத்தில் படைவீட்டு ராஜ்யத்திலும் சந்திரகிரி ராஜ்யத்திலுமுள்ள புத்த, சமணக் கோயில்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டதாக ஒரு கல்வெட்டு கூறுகிறது. தொடர்ச்சியான வரலாற்றுச் சிறப்பு

கொண்டது கரந்தைக் கோயில். கோபுர வாயிலில் காணப்படும் ஒரு கல்வெட்டில் ஒரு பாடல் இக்கோயில் இறைவனைப் போற்றுகிறது.

''காவுவயல் சூழ் தடமும் கனத்த மணிக் கோபுரமும்
பாவையர்கள் ஆடல்களும் பரமமுனி வாசமுடன்
மேவுபுகழ்ந்த திருப்பறம்பை விண்ணவர்கள் போற்றி செய்யத்
தேவரிறை வன்கமலச் சேவடியைத் தொழுவோமே''

நாமும் அவ்வாறே தொழுவோம்.

## ஆரணி வட்டம்

### பூண்டி அருகன் கோயில்

ஆரணி - ஆர்க்காட்டுச் சாலையில், ஆரணியிலிருந்து மூன்று கி.மீ. தொலைவில் இக்கோயில் அமைந்துள்ளது. 'பொன்னெழில் நாதர் கோயில்' என வழங்கப்படும் அருகன் கோயில் சோழர் காலக் கட்டடக்கலைப் பாணியில் அமைந்துள்ளது. தென்னகக் கட்டடக் கலையின் மரபு மாறாமல் கட்டப்பட்டுள்ளது. அடிப்பகுதி கல்லாலும், மேற்பகுதி சுதையாலும் ஆன இக்கோயிலின் விமானத்தில் பல்வேறு சமணத் திருவுருவங்கள் எழிலுடன் காணப்படுகின்றன. ஒரு அரசன் 'வீர வீர ஜினாலயம்' என்ற இக்கோயிலுக்குத் தானம் செய்ததை ஒரு அழகான அகவற்பாவில் அமைந்த ஒரு பாடல் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இவ்வட்டத்தில் சேவூர் என்ற ஊரிலும் பழமையான சமணக் கோயில் உள்ளது.

## திருவண்ணாமலை வட்டம்

### வழுதலங்குணம்

இவ்வூரில் உள்ள மலையின் மேல் உள்ள ஒரு பாறையில் காணப்படும் தீர்த்தங்கரர் சிற்பத்தின் கீழே கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு காணப்படுகிறது. மருதுபிரசுறை தேவர் கற்சிற்பத்தில் சுதையினால் வேலைப்பாடு செய்யப்பட்டதை அக்கல்வெட்டு குறிக்கிறது. மலையில் இயற்கையான குகையில் கற்படுக்கைகள் காணப்படுகின்றன. கல்வெட்டில் இவ்வூர் 'மென்தாரையூர்' எனக் குறிக்கப்படுகிறது.

## போளூர் வட்டம்

### ஒத்தலவாடி

இக்கோயிலில் காணப்படும் பாண்டிய மன்னன் திரிபுவன சக்கரவர்த்திகள் குலசேகரதேவன் (கி.பி. 1271) கல்வெட்டில் இவ்வூரைச் சேர்ந்த ஒதலன் சோழன் மூர்த்தியாழ்வார் என்பவன் 'நாயனார் அணியாத அழகியார் கோயிலுக்குத் தானமளித்தான்' எனக் குறிப்பிடப்படுகிறது. சமண தீர்த்தங்கரர் 'அணியாத அழகர்' எனக் குறிப்பிடப்படுவது நோக்கத்தக்கதாகும். மேலும் இக் கோயிலில் விஜயநகர மன்னரான வீரகம்பண்ண உடையார் கல்வெட்டும் காணப்படுகிறது.

### குன்னத்தூர்

ரிஷபநாதர் கோயில் என அழைக்கப்படும் இவ்வூர் கோயிலில் 15-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு காணப்படுகிறது. இவ்வூர் 'குன்றை' எனக் குறிப்பிடப்படுகிறது. இந்த அருகர் கோயில் கட்டப்பட்டது பற்றியும் கல்வெட்டு குறிக்கிறது.

### திருமலை

இவ்வூர் ஆரணி-போளூர் நெடுஞ்சாலையில் உள்ள வடபாதி மங்கலம் என்ற ஊருக்கு அருகில் உள்ளது. இவ்வூர் 'வைகாவூர் திருமலை' எனவும் வழங்கப்பெறுகிறது. பண்டைக் காலத்திலிருந்து சிறந்த சமணத் திருப்பதியாக விளங்கி வருகிறது. இங்கு கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமணச் சிற்பங்கள் உள்ளன. 10-ஆம் நூற்றாண்டிலிருந்து கல்வெட்டுக்கள் அவ்வூரின் வரலாற்றை அறிய உதவுகின்றன. 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓவியங்கள் உள்ளன. இங்கு முதலாம் இராசராச சோழனின் தமக்கையான குந்தவைப் பிராட்டியார் ஒரு சமணக் கோயிலைக் கட்டினார். அது 'ஸ்ரீ குந்தவை ஜினாலயம்' என்று அழைக்கப்பட்டது.

இங்கு ஒரு சமணப் பள்ளி இருந்தது. இவ்வூர்ச் சமணப் பள்ளியில் பல சமணப் பெரியார்கள் வாழ்ந்தனர். அரிஷ்ட நேமி ஆசாரியார், பரவாதிமல்லர் என்பவர் கடைக் கோட்டூரைச் சேர்ந்தவர். இவர் அரிஷ்ட நேமியின் மாணவராக இங்கு தங்கியிருந்தார். சிரவண பெலகுளத்தில் உள்ள ஒரு கல்வெட்டும் பரவாதிமல்லர் என்பவரைப்

பற்றிக் கூறுகிறது. இவ்விரு கல்வெட்டுக்களும் ஒருவரையே குறிக்கிறது எனலாம்.

இராட்டிரகூட மன்னனான மூன்றாம் கிருஷ்ணன் (கி.பி. 958) காலத்தில் திருமலையில் யக்ஷி உருவத்திற்கு முன்பு விளக்கு எரிக்கக் கங்கமாதேவியின் பணிப்பெண் பெற்றாள் நங்கையார் என்பவள் தானம் அளித்ததாக ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது.

குணவீர மாமுனிவர் என்பவர் கி.பி. 10, 11-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர். முதலாம் இராசராச சோழனின் 21-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஒன்று இவரைப் பற்றிக் கூறுகிறது. கல்வெட்டு இராசராசனின் மெய்க்கீர்த்தியுடன் துவங்குகிறது. கல்வெட்டு பாடல் வடிவில் அமைந்துள்ளது. குணவீர மாமுனிவர் திருமலையில் உள்ள ஏரிக்கு மதகு ஒன்று அமைத்தார். அம்மதகு 'மருபொற்சூரியன்' எனப் பெயரிட்டு அழைக்கப்பட்டது.

பாடற் கல்வெட்டு :

" அலைபுரியும் புனற்பொன்னியாறுடைய சோழன்
அருள் மொழிக்கு
யாண்டிருபத்தொன்றாவதென்றும்
கலை புரியும் மதிநிபுணன் வெண்கிழான் கவிச்சே
கர மரு பொற் சூரியன்றன் நாமத்தால் வாம
நிலை நிற்கும் கலிங்கிட்டு நிமிர் வைகை மலைக்கு
நீடுழி இருமருங்கும் நெல்விளையக் கண்டோன்
கொலை புரியும் படையரசர் கொண்டாடும் பாதன்
குண வீர மாமுனிவன் குளிர் வைகைக் கோவே "

மேலும் 11-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் சேரர் குல அரசனாகிய எழினி என்பவன் எடுத்த இயக்கன் இயக்கி உருவங்கள் பிற்காலத்தில் பழுது பட்டுவிட்டன. அக்குலத்தில் தோன்றிய அதிகமான் விடுகாதழகிய பெருமாள் என்னும் அரசன் அவ்வுருவங்களைப் புதுப்பித்தான் என ஒரு பாடற் கல்வெட்டு கூறுகிறது.

" வஞ்சியர் குலபதி எழினி வகுத்த
வியக்க வியக்கிய ரோ
டெஞ்சிய வழிவு திருத்தி யிவ்வெண்குண
விறை திருமலை வைத்தான்

அஞ்சி தன் வழிவருபவன் வழி முதலி
அதிகன் வகன் நூல்
விஞ்சையர் தல புனை தகடையர் காவலன்
விடுகாதழகிய பெருமாளேய்.''

சோழ மன்னர்களின் சிற்றரசர்களாக இருந்த அத்திமல்லன் சம்பு குலப் பெருமாள் ராஜகம்பீரச் சம்புவராயன், ராஜகம்பீர நல்லூர் என்ற ஊரைத் தானமளித்ததாக மூன்றாம் இராஜேந்திரன் காலக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. ராஜநாராயண சம்புவராயன் கல்வெட்டில் பொன்னூரைச் சேர்ந்த நல்லாத்தார் என்பவன் திருமலையில் விகாரநாயனார்-பொன்னெயில்நாதர் திருவுருவத்தை அமைத்ததாகக் குறிக்கப்படுகிறது.

விஜயநகர மன்னர்கள் காலத்தியக் கல்வெட்டுகளும் காணப் படுகின்றன. சமணத் தலங்களில் மிகவும் சிறப்பான வரலாறு உடைய தலம் திருமலையாகும்.

## வந்தவாசி வட்டம்

### திரக்கோல்

வந்தவாசியிலிருந்து 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்குள்ள குன்றில் மூன்று குகைகளும் மூன்று கோயில்களும் அமைந் துள்ளன. சமணச் சிற்பங்களும் காணப்படுகின்றன. பொன்னூர் நாட்டிலுள்ள வெண்குன்றத்தைச் சேர்ந்த தண்டபுரத்திலிருந்த சமணப் பள்ளிக்குத் தானமளித்ததாகச் சோழர் காலக் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது. கனக வீர சத்தடிகள் என்பவருக்கு நெல் அளிக்கப்பெற்றது பற்றியும், தீர்த்தங்கரர் திருமேனி முன்பு விளக்கு ஏற்றப்பட்டது என்றும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. முதலாம் இராசராச சோழன் கல்வெட்டு ஒன்றில் கங்கசூரப் பெரும்பள்ளி, மைசுத்த பெரும்பள்ளி என்ற இரு ஆலயங்கள் குறிக்கப்படுகின்றன.

### பஞ்சபாண்டவ மலை

இது 'திருப்பான் மலை' எனவும் அழைக்கப்படுகிறது. குடை வரைக் கோயில் உள்ளது. இதற்கு மேலே ஒரு கற்பாறையில் சமண உருவம் ஒன்று தியானத்தில் அமர்ந்திருப்பது போன்று செதுக்கப் பட்டுள்ளது. தென்புறத்தில் அமைந்துள்ள இயற்கையான குகையில்

இயக்கியின் உருவம் காணப்படுகிறது. பல்லவ மன்னன் நந்தி வர்மனின் 50-ஆவது ஆட்சி ஆண்டில் இவ்வுருவம் அமைக்கப்பட்டது என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

"நாகநந்தி குரவர் இருக்க பொன்னியக்கியார் படிமம்
கொத்துவித்தான் புகழானை மங்கலத்து
மருத்துவன் மகன் நாரணன்"

பொன்னியக்கியை சமணர் தொழும் 'சித்தாயிகா' என வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

மேலும் இங்கு காணப்படும் இராசராசன் கல்வெட்டில் லாடராச வீர சோழன் என்பவன் பள்ளிச்சந்தமாக நிலம் அளித்தான் எனக் குறிக்கப்படுகிறது. இம்மலை பண்டைக் காலத்தில் சமணர்கள் தங்கியிருந்த ஒரு சிறப்பான தலமாக விளங்கியிருந்ததைக் கல்வெட்டுக்களால் அறிகிறோம்.

**விடால்**

இங்குள்ள குன்றுகளில் இயற்கையாய் அமைந்த இரண்டு குகைகளின் முன்னுள்ள பாறைகளில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மன் கல்வெட்டு விடால் மற்றும் 'விடார் பள்ளி' என்பதைக் குறிப்பிடுகிறது. ஆதித்த சோழனது கல்வெட்டும் காணப்படுகிறது. குணகீர்த்தி படாரர் மாணாக்கி கனக வீரகுரத்தியார் மற்றும் இவரது 500 மாணாக்கியர்கள் பற்றிய செய்தியைக் குறிப்பிடுகிறது. மாணாக்கியர்கள் இருந்ததால் இவ்வூர் பெரும் சமணப் பள்ளியாக விளங்கியிருக்க வேண்டும்.

**சீயமங்கலம்**

குடைவரைக்கோயில் இவ்வூரில் உள்ளது. மேற்கு கங்க அரசனான இரண்டாம் ராசமல்லனது கல்வெட்டு (கி.பி. 892) சமணப் பள்ளி ஒன்று இருந்ததாகக் குறிப்பிடுகிறது. மேலும் இங்கு காணப்படும் 10-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் சமணப் பள்ளியின் மண்டலாச்சாரியான வஜ்ஜிரநந்தியோகீந்திரர் படிகளை அமைத்தார் என்ற குறிப்பு காணப்படுகிறது. கல்வெட்டில் இங்குள்ள குன்று 'வித்யாதிரி' என அழைக்கப்படுகிறது.

### சளுக்கி

இங்குப் பெருமாள் கோயிலில் காணப்படும் முதலாம் இராசேந்திர சோழனது கல்வெட்டில் சளுக்கி ஊரைக் காப்பதற்காகப் பெருமாள் சிவன் கோயில்களுக்கும், 'வீரகேரள பெரும்பள்ளி'-க்கும் தானமாக ஊர்கள் அளித்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

பொன்னூர் ஆதிநாதர் கோயில் இவ்வூரில் உள்ளது. மாறவர்மன் விக்ரம பாண்டியன் (கி.பி.1256) கல்வெட்டு ஆதிநாதர் கோயிலுக்கு அளிக்கப்பட்ட வரிகளைப் பற்றிக் கூறுகிறது. இவ்வூரைச் 'சுவர்ணபுரி' என்று மற்றொரு கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இக்கோயிலில் உள்ள ஜ்வாலா மாலினி அம்மன் சிறப்புப் பெற்றது.

### வெண்குன்றம்

இங்குள்ள சமணக் கோயில் சிங்கத்தின் மீது காலை வைத்துக் கொண்டிருக்கும் யக்ஷி அம்பிகை சிற்பம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. பிற்காலச் சோழர் காலத்தைச் சார்ந்ததாகும்.

### சாத்தமங்கலம்

வந்தவாசிக்கு தென்மேற்கே 8 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து சமணர்களின் சிறந்த இடமாக திகழ்ந்திருக்கிறது என்பதைச் சிற்பங்களினாலும், கல்வெட்டுக்களினாலும் அறிய முடிகிறது. இரண்டாம் நந்திவர்மனின் 14-ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டு ஊர்த் தலைவரான இளையர் பவணந்தி என்பார் சமணப்பள்ளியைச் சாராத துறவிகளுக்கு உணவு அளிக்க ஏழு கழஞ்சுப் பொன் கொடையாக அளித்த செய்தியைக் கூறுகிறது. மற்றொரு கல்வெட்டில் சாத்தமங்கலம் ஏரியைப் பராமரிக்க ஊர் சபைக்கு நிலம் அளிக்கப்பட்ட செய்தி கூறப்படுகிறது. கம்பவர்மனின் (கி.பி. 869-901) கல்வெட்டு ஒன்று காடகதிரையர் என்பாரின் மகள் மாதவி என்பாள் கோயில் திருப்பணி செய்ததையும் முகமண்டபம் எடுப்பித்ததையும், பாழி ஒன்றுக்குத் திருப்பணி செய்ததையும், யக்ஷியக்கபடாரி கோயில் எடுப்பித்ததையும் குறிப்பிடுறது. முதலாம் இராசராசன் காலத்தில் சாத்தமங்கலத்துப் பள்ளியைச் சேர்ந்தவனும், நந்தி தேவரின் மாணாக்கனுமான பலதேவபடாரன் என்பவன் விமலஶ்ரீ என்னும்

தீர்த்தப்பள்ளி ஆழ்வார்க்கு ஒரு நுந்தாவிளக்கு எரிப்பதற்காகத் தனது ஊரான சாத்தமங்கலத்திலிருந்து நிலம் இறையிலியாக அளித்தான். சாத்தமங்கலம், வெண்குன்றக் கோட்டத்திலுள்ள வெண்குன்ற நாட்டைச் சார்ந்ததெனக் கல்வெட்டில் குறிப்பிடப் படுகிறது. மேலும், இவ்வட்டத்தில் இளங்காடு, தேசூர், தெள்ளாறு ஆகிய ஊர்களிலும் சமணக் கோயில்கள் உள்ளன.

மேற்கண்ட வரலாற்றுச் சான்றுகளால் சம்புவராயர் மாவட்டத்தில் சமண சமயம் சிறப்புற்று விளங்கியதைக் காண்கிறோம். இன்றும் இங்கு சமண சமயம் சிறப்பான இடம்பெற்று விளங்குகிறது.

---

ஆதார நூல்கள் :

1. சமணமும் தமிழும் - மயிலை சீனி. வேங்கடசாமி
2. DAMILICA, தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு
3. Jaina Inscriptions in Tamil Nadu by Dr. A. Ekambaranathan & Dr. C. K. Sivaprakasam—1987
4. 'கல்வெட்டுக் கருத்தரங்கு' - ஆசிரியர் - இரா. நாகசாமி - 1966

★

# திருத்தாமரைப்பாக்கம்

கு. தாமோதரன், எம்.ஏ.,
துணை இயக்குநர்

புதிதாக அமையவிருக்கின்ற சம்புவராயர் மாவட்டத்தில், செங்கம் வட்டத்தில், செங்கம் - போளூர் நெடுஞ்சாலையில் கடலாடிக்குத் தெற்கே ஐந்து கி.மீ. தொலைவில், செய்யாற்றின் தென்கரையில் 'தாமரைப்பாக்கம்' என்ற சிற்றூர் அமைந்துள்ளது. கல்வெட்டுக்கள் இவ்வூரைத் 'திருத்தாமரைப்பாக்கம்' என்று குறிக்கின்றன. செயங்கொண்ட சோழ மண்டலத்துப் பல்குன்றக் கோட்டத்து, காந்தளூர்க்கூற்றத்துப் புதநல்பாடி நாட்டில் திருத்தாமரைப்பாக்கம் அமைந்திருந்தது.

திருத்தாமரைப்பாக்கத்திற்கு அழகூட்டுகின்ற வகையில் இங்கு திருஅக்னீஸ்வர மகாதேவர் கோயில் விளங்குகிறது. இக்கோயிலின் கட்டட அமைதியினை நோக்கும்பொழுது இது முதலாம் பராந்தகனுக்கு முன்னதாகக் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று ஊகிக்க முடிகிறது. சோழர் காலக் கட்டடக் கலைக்கு இக்கோயில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

## கல்வெட்டுக்கள்

இக்கோயிலிலிருந்து 30-க்கு மேற்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்கள் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் படியெடுக்கப் பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்கள் இக்கட்டுரை ஆசிரியரால் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பெற்றவையாகும். சோழர், காடவராயர், பாண்டியர் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுக்கள் படியெடுக்கப் பட்டுள்ளன. இவை முதலாம் பராந்தகன், முதலாம் இராசேந்திரன், முதலாம் இராஜாதிராஜன் மற்றும் இரண்டாம் இராசேந்திரன், மூன்றாம் குலோத்துங்கன், கோப்பெருஞ்சிங்கன், குலசேகரபாண்டியன் ஆகிய மன்னர்கள் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுக்களாகும்.

மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது. அப்பொழுது கல்வெட்டுப் படிகள் திரும்பவும் பொறிக்கப்பட்டுள்ளன. சுமார் 25 கல்வெட்டுக்கள் சோழர்கள் காலத்தைச் சார்ந்தவைகளாகும். இவற்றுள் காலத்தால் முந்தையது முதலாம் பராந்தகனின் 13-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். முதலாம் பராந்தகன், முதலாம் இராஜேந்திரன், முதலாம் இராஜாதித்தன் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுக்கள் திருஅக்னீஸ்வர யகாதேவர்க்கு நுந்தாவிளக்கெரிப் பதற்குப் பொன், நிலக்கொடை கொடுத்ததைக் குறிக்கின்றன. இது தவிர அறக்கொடைகளும் குறிக்கப்படுகின்றன. தேவதான நிலங்கள், ஜென்மக்காணி, திருமுக்காணி ஆகிய நிலங்களை வைத்திருப் பவர்கள் தினப்படி வழிபாட்டிற்குக் கொடை கொடுத்தது குறிக்கப்படுகிறது.

### சித்திரமேழிப்பெருக்காளர்

இரண்டாம் இராசேந்திரனின் ஐந்தாவது ஆட்சியாண்டைச் சார்ந்த கல்வெட்டு 'சித்திரமேழிப்பெருக்காளரை'க் குறிக்கிறது. முற்காலத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுக்கென்று ஒரு கூட்டு அமைப்பை வைத்திருந்தனர். அதற்குச் 'சித்திரமேழி நாட்டார்' என்று பெயர். மற்ற குழுக்களில் இருந்து இதன் தனித் தன்மையை வெளிப்படுத்துகின்ற வகையில் இதற்குத் தனியாக ஒரு அமைப்பு இருந்தது. இவர்களுக்கென்று தனியாக ஒரு மெய்க் கீர்த்தியே உண்டு. இவர்கள் தங்களைப் 'பூமி புத்திரர்கள்' என்று கூறிக்கொண்டனர். இவர்கள் தங்களுடைய உரிமையினை நிலை நாட்டுகின்ற வகையில் சித்திரமேழி விதிமுறை என்ற ஒரு விதி முறையினை அமைத்துக் கொண்டனர். சமூக அமைப்பில் இப்பிரிவு மக்கள் 'நாடு' என்றும் இதன் உறுப்பினர் 'நாட்டார்' என்றும் அழைக்கப்பட்டனர். பல நாடுகள் ஒன்று சேர்ந்த அமைப்பிற்குப், 'பெரிய நாடு' என்று பெயர். இதில் ஈடுபாடு கொண்ட மக்கள் 'பெரிய நாட்டார்', 'பெருக்காளர்' என்று அழைக்கப்பெற்றனர்.

இந்த அமைப்பு முதலாம் இராசேந்திரன் ஆட்சிக்காலத் திலிருந்து 'இராசேந்திர சோழச் சித்திரமேழிப் பெரிய நாடு' என்று அழைக்கப்பெற்றது.

சித்திரமேழிப் பெருக்காளர் சபையார் ஒரு விசித்திரமான வழக்கினை விசாரித்தனர். **தருப்பேருடையான் தாழிக்கோன்**

என்பவன் இவ்வழக்கினைச் சபையின் முன்வைக்கின்றான். இவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். ஒருவன் பெயர் சங்காத்தடியன் மற்றவன் பெயர் பெரியான் என்பதாகும்.

மேற்காணும் இருவருக்கும் பூசல் ஏற்பட்டு ஒருவருக் கொருவர் அடித்துக் கொள்ளும் நிலை ஏற்படுகிறது. அண்ணன் தம்பியை அடிக்கிறான். அப்பொழுது தம்பிக்குக் கோபம் உண்டாகி, தம்பி அண்ணனை அடிக்க அண்ணன் இறந்து விடுகிறான். இதனைக் கேள்வியுற்ற 'பெருக்காளர் சபையார்' தருப்பேருடையான் தாழிக்கோன் என்பவனிடம் உங்களுக்கு இளையவனைத் தவிர வேறு பிள்ளைகள் குடும்பத்தைக் காப்பாற்ற இருக்கின்றனரா? என்று கேட்க, தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு வேறு பிள்ளை யாரும் இல்லையென பதில் அளித்தான். இளையவன் செய்தது கடுமையான கொலைக் குற்றமாக இருந்தாலும் இவனுக்கு மரண தண்டனை அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. இதற்காக இளையவன் இறத்தல் வேண்டாம் என்றும், அவன் செய்துள்ள பாவச் செயலுக்குப் பரிகாரமாகத் திருஅக்னீசுரமுடையார் கோயிலுக்கு ஒரு நுந்தாவிளக்கு எரிப்பதற்கு வேண்டிய செலவினை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனச் சபையார் தீர்ப்பளித்தனர். மரண தண்டனை விதிக்க வேண்டிய ஒருவனுக்கு அவனுடைய வயதான தாய் தந்தையரின் ஏழ்மையான குடும்பச் சூழ்நிலை கருதியும், அவர்களுக்கு வேறு யாரும் ஆதரவு இல்லை என்பதைக் கருதியும் இவனுக்கு மரண தண்டனை விதிக்காமல் ஊர்ச்சபையார் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு தீர்ப்பளித்துள்ளது அக்கால சமுதாயத்தில் நிலவிய நீதி நிலையைப் பற்றித் தெரிந்து கொள்ள உதவுகிறது.

### நாட்டார்

விவசாயப் பெருங்குடி மக்களின் சமூக அமைப்பின் அடிப்படை 'நாடு' என்பதாகும். இதில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் 'நாட்டார்' என்று அழைக்கப்பட்டனர். நாட்டார்கள் வேளாண் வகை ஊர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆவார்கள். நாட்டார்கள் சபை, வேளாள சமூகத்தைச் சார்ந்த மக்களின் பாதுகாப்பிற்கும் வேளாளப் பெருங்குடி மக்களின் நன்மைக்காகவும் பெரிதும் பாடுபட்டது.

இராசேந்திரனின் 10-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு பல்குன்றக்கோட்டம், வெண்குன்றக்கோட்டம், பனையூர், திருமலைப்பாடி, மிலாடு என்கிற ஜனநாத வளநாடு, புதநல்பாடி, பங்களநாடேழு மற்றும் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தில் உள்ள உத்தமசோழ வளநாடு ஆகிய பகுதிகளில் உள்ள நாட்டார்கள் அனைவரும் திருஅக்னீஸ்வர மகாதேவர் கோயிலில் வேளாள சமூகத்தைச் சார்ந்த மக்களின் பல்வேறு பிரச்சினைகளை ஆராய்வதற்கும், நிலவரியை நிர்ணயம் செய்வதற்கும் கூடியதைக் காட்டுகிறது. நாட்டார்களால் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. பதினாறு சாண்கோலால் அளிக்கப்பட்ட ஒரு வேலி நீர் நிலத்திற்கு வரியாக விவசாயிகள் 50 கலம் நெல்லை அருள்மொழி தேவன் மரக்காலால் அளந்து கொடுத்தல் வேண்டும். கார்நிலமாக இருந்தால் ஒரு வேலி நிலத்திற்கு வரியாக 40 கலம் நெல்லை ஒவ்வொரு விவசாயியும் அளித்தல் வேண்டும். புன்செய் நிலமாக இருந்தால், ஒரு வேலிக்கு இறையாக மூன்று காசு அளித்தல் வேண்டும். விவசாயப் பெருங்குடி மக்களிடத்திலிருந்து நில வரியினை பண்டாரம் (கருவூலம்) வசூலித்தல் வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனைக் கல்வெட்டு 'திருவாணை' என்று குறிக்கிறது. இத்திருவாணையைச் சித்திரமேழி நாட்டைச் சார்ந்த பட்டன் என்பவன் எழுதியுள்ளான்.

திருத்தாமரைப்பாக்கம் திருஅக்னீசுவரர் திருக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில், சோழ மன்னன் மூன்றாம் குலோத்துங்கனின் காலத்தைச் சார்ந்த இரண்டு கல்வெட்டுக்கள் அக்காலத்தில் நிலவிய 'உடன்கட்டை ஏறும்' முறையை நமக்குத் தெரிவிக்கின்றன.

சோமன் பிரிதிகங்கன் என்பவனுடைய தந்தை கூத்தாடும் தேவரான பிரிதிகங்கர் என்பவர். கூத்தாடும் தொழிலில் வல்லவராய் விளங்கினார். இவர் திருஅக்னீஸ்வரர் மகாதேவர் கோயிலில் கூத்தாடும் தொழிலில் ஈடுபட்டிருந்தார். அவருடன் பெண்ணொருத்தியும் பாடும் தொழிலில் ஈடுபட்டிருந்தாள். பிரிதிகங்கர் இறந்துபட்டபொழுது இவருடன் பாடும் தொழிலில் வல்ல பெண்ணொருத்தியும் பள்ளிகொண்டாளென்ற செய்தியினைக் கல்வெட்டு "கூத்தாடும் தேவரான பிரிதிகங்கருடன் பள்ளி கொண்ட பாடும் பெண்ணும்" என்று குறிக்கிறது. இவள் இறந்துபட்டதால்

இவளுடைய குடும்பத்திற்கு ஏற்பட்ட வருத்தத்தையும், இழப்பையும் போக்குவதற்கு இவளுடைய சந்ததியினருக்கு நிலம் கொடையளிக்கப் பட்டது குறிக்கப்படுகிறது.

சிறந்த அரசர்கள் இறந்த பொழுது அவர்கள் நினைவாக நிறுவப்படும் நினைவுச் சின்னத்திற்குப் பள்ளிப்படை என்று பெயர். தமிழகத்தில் முற்காலச் சோழர்கள் காலத்தில் பள்ளிப்படையாகக் கோயில்கள் எடுப்பிக்கப்பட்டுள்ளன.

முதலாம் பராந்தகனின் தந்தையான முதலாம் ஆதித்தன் பள்ளிகொண்ட பிறகு அவரது நினைவாகப் பள்ளிப்படையாகத் தொண்டை நாட்டில் 'ஆதிசுவரர் கோயில் பராந்தகனால் எடுப்பிக்கப்பட்டது. இதைப் போலவே ஆற்றூரில் பள்ளிகொண்ட அரிஞ்சயனுக்காக முதலாம் இராசராசன் மேல்பாடி என்ற ஊரில் அரிஞ்சிகை ஈஸ்வரர் கோயில் எடுப்பித்தான்.

இங்கு பள்ளிகொண்ட பாடும் பெண்ணின் குடும்பத்தாருக்குச் சோமன் பிரிதிகங்கர் அறக்கொடையாக நிலம் அளித்துள்ளார். இந்த நிலம் பதினாறு சாண் கோலால் அளந்து விடப்பட்ட ஒரு வேலியாகும். (இருபது மா) இதை இவளுடைய சந்ததி உள்ள வரை ஆண்டு அனுபவித்துக் கொள்ள வேண்டியது. இந்த நிலத்திற்குச் சோமன் பிரிதிகங்கனுடைய வழி முறையைச் சார்ந்தவர்கள் தீங்கு செய்ய நினைத்தால் அவர்கள் பாவத்தில் போவார்களாக என்று கல்வெட்டு குறிக்கிறது. கணவன் இறந்துபட்டபொழுது மனைவியும் உயிர் நீத்தல் (உடன்கட்டை ஏறுதல்) வேண்டும் என்ற பழக்கம் தமிழ் நாட்டில் இருந்து வந்திருக்கின்றது. சுந்தர சோழனின் பட்டத்தரசி வானவன்மாதேவி என்பவள் மன்னன் இறந்தபொழுது அவன் இழப்பைத் தாங்க மாட்டாதவளாய்த் தீப்பாய்ந்தாள் என்பதையும் அறிகிறோம்.

கணவனுடன் மனைவி உயிர் நீத்தலை அறிந்திருக்கிறோம். ஆனால் இங்கு குறிக்கப்படுகின்ற கூத்தாடும் தொழிலில் வல்ல பிரிதிகங்கர் என்பவருடன் பாடும் தொழிலில் வல்ல பெண் ஒருத்தி பள்ளிகொண்டது புதுமையான செய்தியாகும்.

மூன்றாம் குலோத்துங்கனின் காலத்தைச் சார்ந்த மற்றொரு கல்வெட்டு கூத்தாடும் பிரிதிகங்கனுடன் ஆடும் தொழிலில் வல்ல ஆழ்வார் ஒருவரும் இறந்துபட்டது குறிக்கப்படுகிறது. (பள்ளி கொண்டது) கூத்தாடும் தொழிலில் வல்ல பிரிதிகங்கருடன் பாடும் பெண்ணும், ஆடலில் சிறந்த ஆழ்வாரும் பள்ளி கொண்ட நிகழ்ச்சி யினை அறியும்போது நமக்கு உணர்ச்சி மேலோங்குகிறது. கூத்தாடுதல், பாடுதல் இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள தொழில்களாகையால் அவர்களுக்குள் ஏற்பட்ட அன்பின் பெருக் காலேயே அவருடன் பள்ளிக்கொண்டிருத்தல் கூடும். இறந்துபட்ட ஆழ்வார் குடும்பத்தாருக்கு ஒரு வேலி நிலம் அளிக்கப்பட்டது. பதினாறு சாண் கோலால் அளந்துவிடப்பட்டதென்பதை நோக்கும் பொழுது மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தில் கொடை யாக நிலத்தை அளக்கும்போது அளவுகோலாக பதினாறு சாண் கோல்தான் வழக்கிலிருந்திருக்கிறது என்பதை நம்மால் உணர முடிகிறது.

முதலாம் இராசராசன் தன்னுடைய ஆட்சிப் பகுதியினை முறையாக அளந்து வகைப்படுத்தினான். அதுபோல அவனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த மூன்றாம் குலோத்துங்கன் காலம் வரை பொது நில அளவை முறை வழக்கில் இருந்திருக்கிறது. நில வரி பணமாகவும், பொருளாகவும் வசூலிக்கப்பட்டுள்ளது. விளை நிலங்கள் நீர் நிலம், கார்நிலம், புன்செய் நிலம் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு விளைச்சலுக்கு ஏற்ப வரி வசூலிக்கப் பட்டுள்ளது என்பதைக் கல்வெட்டுக்கள் வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

★

# சம்புவராயர் மாவட்டத்தின் தொல்பழங்கால வரலாறு

சி. வசந்தி, எம்.ஏ.,
அகழ்வாய்வாளர்

வரலாற்றில், எழுத்துச் சான்றுகள் இல்லாத காலகட்டத்தில், மனிதன் வாழ்ந்திருந்தானா என்ற வினாவிற்கு விடையாக இருப்பவை, அம்மனிதன் அன்றாடம் பயன்படுத்திய பொருட்களே. பழங்காலத்தில் அவனுக்கு எளிதில் கிடைத்த மரம், எலும்பு, கல் ஆகியவற்றின் மூலம், தனக்குத் தேவையான பொருட்களை உருவாக்கினான். வாழ்க்கையை வேட்டையாடியே நடத்தியதால், அதற்குத் தேவையான கருவிகளையே பெரும்பாலும் உருவாக்கினான். இவற்றில் மரக் கருவிகளும், எலும்புக் கருவிகளும் காலத்தால் அழிந்தன. எஞ்சியுள்ள கற்கருவிகளே மனித வரலாற்றை நாம் அறியச் சான்றாக இருப்பவை.

தமிழகத்தில்தான், சுமார் 1 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனிதன் வாழ்ந்துள்ளான் என முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. அம்மனிதன் பயன்படுத்திய கற்கருவிகள், செங்கை அண்ணா மாவட்டத்தில் ஓடும் கொர்த்தலையாற்றுப் பள்ளத்தாக்கில் அதிகம் கிடைக்கின்றன. இப்பகுதியில் நடைபெற்ற அகழ்வாய்வில் பழைய கற்கால (Palaeolithic) கருவிகள், நுண்கற் (Microlithic) கருவிகள் ஆகியவை படிப்படியாகக் கிடைத்துள்ளன.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன், கொர்த்தலை யாற்றின் பள்ளத்தாக்கில்தான், பாலாறு ஓடிக்கொண்டிருந்ததாக நில அமைப்பியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அண்மையில்தான் பாலாறு தன்னுடைய நீர்ப்போக்கை மாற்றிக் கொண்டதாகவும் கருதுகின்றனர். (இப்போது பாலாறு, கர்நாடகத்தில் நந்தி மலை யிலிருந்து தொடங்கிச் சம்புவராயர், வடார்க்காடு மாவட்டத்தின் வழியே பாய்ந்து செங்கை அண்ணா மாவட்டத்தில் சதுரங்கப் பட்டினத்தில் கடலில் கலக்கிறது). இவ்வாறு பாலாற்றின் போக்கு

மாறியதால், அதனுடன் இயைந்து வாழ்க்கை நடத்திய பழையகற்கால மனிதனும், அதன் போக்குக்கு ஏற்றவாறு சென்று நிலையாகத் தங்கி வாழத் தலைப்பட்டான். பிற்காலத்தில்தான் தமிழகத்தில் மக்கள் சிறிதுசிறிதாக வடமாவட்டங்களிலிருந்து தென் மாவட்டங்களுக்குப் பரவியிருக்கவேண்டும்.

பாலாற்றின் வழியே சென்ற அக்கால மனிதன், அப்பகுதியில் கிடைக்கும் பசால்ட், கிரானைட் போன்ற பாறைகளைக் கொண்டு நேர்த்தியான நன்கு தீட்டப்பட்ட பளப்பளப்பான கற்கருவிகளைச் செய்யத் தொடங்கினான். இவையே புதிய கற்காலக் கருவிகள் ஆகும். மிகவும் உறுதி வாய்ந்த இக்கருவிகளைக் கொண்டு நிலத்தை அகழ்ந்து வேளாண்மை செய்யத் தொடங்கினான். இப்புதிய கற்கால மனிதனே 'விவசாயப் புரட்சிக்கு' அடிகோலியவன். இம்மக்களே தற்காலத்திய திராவிட மொழி பேசும் மக்களின் முன்னோடிகள்.

இம்மாவட்டத்தில், கப்பல்வாடி, சீயமங்கலம் ஆகிய இடங்களில் சில கற்கருவிகள் சேகரிக்கப்பட்டன. இக்கருவிகள் புதியகற்கால கருவிகளுக்கும், பழைய கற்கால கருவிகளுக்கும் இடைப்பட்டனவாக உள்ளதால், புதிய கற்கால கருவிகள் செய்யத் தொடங்கிய காலத்தின் தொடக்கத்தில் செய்யப்பட்டனவாக இருக்க வேண்டும்.

இம்மாவட்டத்தில், புதியகற்காலக் கருவிகள் சவ்வாது, ஏல மலைத் தொடர் பகுதிகளிலும், தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களிலும் அதிகம் கிடைக்கின்றன. இப்பகுதிகளில் இத்துடன் நுண்கற்கருவிகளும்கூட கிடைக்கின்றன. இதனை நோக்கும்போது, தொல்பழங்காலத்தில் சிறப்புற்று விளங்கிய ஒரு பண்பாட்டு நிலையிலிருந்து, மற்றொரு நிலைக்கு மாறும்பொழுது-வளர்ச்சியுறுகின்ற பொழுது அமைதியாகவும் வளர்ச்சியுற்றிருப்பதைக் காண்கிறோம். பண்டைய அப்பகுதி மக்களுடன், புதிதாக நுழைந்த மக்களும் இணைந்து வாழ்ந்தனர். இதனால் பழைய பண்பாட்டின் கூறுகளுக்குப் பேரழிவு உண்டாகவில்லை.

சம்புவராயர், வடார்க்காடு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு, அகழ்வாய்வுகளின் மூலம் புதிய கற்கால பண்பாடு பற்றிய அரிய செய்திகள் அறியப்படுகின்றன. சந்திரபுரம், திருமலை ஆகிய இடங்களிலும், பையம்பள்ளி, அப்புக்கல்லு, இராஜக்கல்லு

ஆகிய இடங்களிலும் அகழ்வாய்வு செய்யப்பட்டன. இவற்றின் மூலம், இக்கால மக்கள், மலைகளில் உள்ள சமவெளிகளின் மீது குடிசைகளைக் கட்டிக் கொண்டு வாழ்ந்துள்ளனர்; ஆவினங்களைப் பேணி வளர்த்தனர். கேழ்வரகு, கொள்ளு, பச்சைப்பயறு போன்ற வற்றைப் பயிர் செய்தும், வேட்டையாடியும் வாழ்க்கை நடத்தினர் எனவும் அறியப்படுகிறது. இறந்த பின்னர் வாழ்க்கை உண்டு என்ற நம்பிக்கை காரணமாக இறந்தவரைப் புதைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். கார்பன்-14 என்ற கால கணக்கீட்டு முறைப்படி கி.மு. 2400 முதல் கி.மு. 900 வரை புதிய கற்கால நாகரிகம் இப் பகுதியில் இருந்தது என அறிகிறோம்.

இப்புதிய கற்கால மக்களின் பொருளாதார வாழ்க்கையில் ஆவினங்கள் முக்கிய பங்கு பெற்றதால், தமிழரின் திருநாளாக இன்று கொண்டாடப்படும் பொங்கல் போன்ற விழாக்களை கொண்டாடி யிருத்தல் கூடும். இதன் தொடர்ச்சியாகத்தான் சங்க இலக்கியங் களில் ஆநிரை கவர்தல், மீட்டல் போன்றவை பெரிதும் போற்றிப் பாடப்பட்டன போலும்.

கொர்த்தலையாற்றின் பள்ளத்தாக்கில் வாழ்ந்த பழைய கற்கால மனிதன், பாலாற்றுப் போக்குடன் இடம்பெயர்ந்து, அவ்வாற்றின் கரையில் வாழத் தொடங்கினான். பின்னர் புதிய கற்காலக் கருவி களைச் செய்து வேளாண்மைப் புரட்சி செய்தான். இக்காலத்திற்குப் பிறகு பெருங்கற்கால ஈமச் சின்னங்களும், வரலாற்றுக் காலத்தின் நடுகற்களும் இம்மாவட்டத்தில் அதிக அளவில் காணப்படுவதால், இப்பகுதியில் தொடர்ந்து மனிதன் வாழ்ந்து வந்ததை அறிய முடிகிறது. இன்றளவும் இப்பகுதியில் நாகரீக வளர்ச்சி அடையாத பழங்குடிகள் வாழ்ந்து வருகின்றனர்.

---

மேற்கோள் நூல்கள்

1. தமிழ்நாட்டு வரலாறு - தொல்பழங்காலம்
2. Neolithic & Megalithic Cultures in Tamil Nadu - By B. Narasimhaiah
3. Pre-Historic and Proto-Historic Antiquities of South India - Bruce Foote R.
4. Pre-and Proto-History of South-Western Andhra Pradesh - Rami Reddy V.
5. A Bibliography on Indian Neolithic Culture - Ramachandran K. S.

★

# பேரரசை உருவாக்கும் சிற்றரசு

ஆ. பத்மாவதி, எம்.ஏ., டி.இ.ஏ.
கல்வெட்டாய்வாளர்

அரசாங்கப் பதவியில் இருக்கும் அதிகாரிகளுக்கு அரையர் என்ற பெயர் கொடுக்கப்பட்டது. அரையர், மாராயர், பேரரையர், முத்தரையர், அதியரையர் என்று அரசியல் பதவிகளின் ஏற்றத்திற்கு தக்கவாறு அவை தரப்பட்டன. மன்னர் அவையில் அமைச்சர்களாக இருப்பவர்களுக்கும், படை நடத்திச் செல்லும் படைத் தளபதி களுக்கும் மட்டுமின்றி, பிற கலைத் துறைகளில் சிறந்து விளங்கியவர் களுக்கும் கூட அரையர் என்ற பெயர் தரப்பட்டது. உதாரணமாக நாடகப் பேரரையன், நிருத்தமாராயன் போன்றவற்றைக் கூறலாம்.

மேற்கூறியவாறு அரசியலில் முக்கியப் பங்கு பெறுபவர்கள் பெரும்பாலும் குறுநிலமன்னர்களாகவே இருந்தனர். அவர்கள் அவ்வப்போது பேரரசுகளுடன் உறவு வைத்துக் கொண்டு பெரிய பதவிகள் வகித்துத் தங்கள் குலப் பெயரை நிலைநாட்டி வந்தனர்.

9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாண்டியருக்கும் பல்லவருக் கும் பலப்பரீட்சை நடந்துகொண்டிருந்தது. பல்லவர்களுக்கு உடன் நின்று துணை புரியும் நிலையிலேயே சோழன் விஜயாலயனும் ஆதித்தனும் இருந்தனர். திருப்புறம்பியத்தில் நடந்த பலப் பரீட்சையில், பல்லவர் பக்கம் சோழன் முதலாம் ஆதித்தனும், கங்க மன்னன் பிருதிவிபதியும் மற்றும் பிற சிற்றரசர்களுமே பல்லவர் வெற்றி பெறத் துணை புரிந்தனர்.

தஞ்சையை மட்டுமே பிடித்து வைத்துக் கொண்டிருந்த சோழர்கள் இந்த வெற்றிக்குப் பிறகு, முத்தரையர், கொடும்பாளூர் வேளிர், கங்க மன்னன் முதலாம் பிருதிவிபதியின் வழிவந்தோர் ஆகிய சிற்றரசர்களைத் தங்கள் பக்கம் சேர்த்துக் கொண்டனர். பல்லவனுக்கு உதவி புரியும் பாணர்கள் சுயேட்சை மன்னர்களாக இயங்க ஆரம்பித்தனர். பல்லவன் பலம் குறைய ஆரம்பித்தது.

இந்நிலையில் சோழன் முதலாம் ஆதித்தன் பல்லவரை வென்று தொண்டைநாட்டையும் கைப்பற்றினான்.

இவ்வாறு ஒரு அரச குலம் அழியவும் மற்றொரு அரச குலம் தழைக்கவும் முக்கிய காரணமாக இருந்து பங்கு புரிந்தவர்கள் சிற்றரசர்களே ஆவர். சோழர் குலம் தழைக்கத் தோள் கொடுத்த முக்கியமான சிற்றரசர்கள் பழுவேட்டரையர், முத்தரையர், கொடும்பாளூர் வேளிர் ஆகியோரே யாவர். இவர்கள் சோழப் பேரரசு ஆதிக்கம் செலுத்திய காலம் முழுவதும் தங்கள் ஒத்துழைப்பைத் தந்தனர். பேரரசர்களும், இந்த சிற்றரசர்களுடன் தங்கள் வல்லரசு உருவாகக் காரணமாக இருந்த நட்பை உறவாக மாற்றி மண உறவு கொண்டு தங்கள் ஆட்சியைப் பலப்படுத்தினர்.

கி.பி. 12,13-ஆம் நூற்றாண்டுகளில் திருக்கோயிலூர்ப் பகுதியை ஆண்ட பழைய மலையமான் பரம்பரையினராகிய சேதிராயர், இன்றைய தென், வடஆர்க்காடு பகுதியில் சம்புவராயர், திருச்சி அருகே வாழ்ந்த முத்தரையர், சேலம், தருமபுரி பகுதியில் சிற்றரசர்களாக வாழ்ந்த அதியமான்கள், ஆறகழூர் பகுதியில் வாழ்ந்த மகதை நாடாழ்வார், நீலகங்கரையர், மதுரை அருகே வாழ்ந்த வாணாதிராயர்கள், கர்னாடக பகுதியிலிருந்து வந்த ஹொய்சளர்கள், தெலுங்குச் சோழர்கள், பல்லவன் கோப்பெருஞ்சிங்கன் போன்ற சிற்றரசர்கள் ஏராளமாகக் காணப்படுகின்றனர்.

இந்தச் சிற்றரசர்களில் சம்புவராயர் எனப்படுபவர்கள் விக்கிரம சோழன் காலத்தில் ஓரிருவர் காணப்பட்டாலும் இரண்டாம் இராஜராஜ சோழன் காலம் முதல் தொடர்ந்து காணப்படுகின்றனர். பாண்டி நாட்டில் இரு பாண்டிய வம்சங்களைச் சேர்ந்த குலசேகரன், பராக்கிரமன் ஆகிய இருவருக்கும் ஏற்பட்ட தாயாதிச் சண்டையில் கொல்லப்பட்ட பராக்கிரம பாண்டியனின் மகன் இலங்கை மன்னன் பராக்கிரமபாகுவின் உதவியை நாடி அரசனாகிவிட்ட காரணத்தினால், குலசேகரன் சோழ மன்னன் இரண்டாம் இராஜாதிராஜன் உதவியை நாடியபோது சோழன் குலசேகரனை அரியணையில் அமர்த்த, வீரபாண்டியனுக்காக வந்த சிங்களப்படை, குலசேகரனை அரியணையில் இருந்து நீக்கிவிட்டு தொண்டி, பாசி ஆகிய ஊர்கள் வரை முன்னேறிவிடவே, எதிரிலிசோழச் சம்புவரையன் என்ற

அதிகாரி, சுவாமிதேவர் என்ற சிவஞானியிடம் சென்று, மேற்கூறிய நிலையை விளக்கி சிங்களப் படையால் வரும் ஆபத்தைத் தடுக்குமாறு வேண்டிக்கொள்ள சுவாமிதேவர் சிவபூஜை செய்ததன் விளைவாக சிங்களப் படையின் தண்டநாயகர்களான ஜயத்ரத தண்டநாயகனும் லங்காபுரி தண்டநாயகனும் கொல்லப்பட்டு குலசேகர பாண்டியன் அரியணையில் அமர்த்தப்பட்டான். அதனால் எதிரிலி சோழ சம்பு வரையன் சுவாமிதேவருக்கு ஆர்ப்பாக்கம் என்ற ஊரை தானமாக அளித்தான். இவ்வாறு சோழ அரசுக்கு மிகவும் நம்பிக்கைக்கு உகந்த அதிகாரிகளாகச் சம்புவராயர் பணிபுரிந்திருக்கின்றனர்.

பின்னர் மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலும் தொடர்ந்து இந்த தாயாதிச் சண்டை நடந்தது. இப்போர்களிலும் அண்ணன் பல்லவரையனுடன் சம்புவராயச் சிற்றரசர்களும் கலந்துகொண்டு பாண்டி நாட்டு வெற்றியைச் சோழர்களுக்குப் பெற்றுத் தந்தனர். செங்கேணி அம்மையப்பனான இராஜராஜ சம்புவரையன் என்பவன் 'பாண்டிநாடு கொண்டான்' என்று வழங்கப்பட்டிருக்கிறான். இம் மன்னன் காலத்திலும் மூன்றாம் இராஜராஜன் காலத்திலும் பல சம்புவரையர்களின் பெயர்கள் காணப்படுகின்றன.

மூன்றாம் இராஜராஜனுக்குப் பிறகு மூன்றாம் இராஜேந்திர சோழன் ஆட்சியுடன் சோழ அரசு கி.பி. 1279-இல் முடிவுபெறவே, சம்புவராயர்கள், எந்தப் பாண்டி மண்டலத்தைச் சோழர்களுடன் சேர்ந்து வென்று ''பாண்டிநாடு கொண்டான்'' எனப் பெயர் பெற்றார்களோ, அதே பாண்டிய மன்னர்களின் கீழ் சிற்றரசர்களாக இயங்கத் தலைப்பட்டனர். சோழ அரசின் கடைசி மன்னனாகிய மூன்றாம் இராஜேந்திரனின் காலம் கி.பி. 1244 முதல் 1279 வரையிலாகும். இக்காலத்தில் பாண்டிய நாட்டில் முதலாம் மாறவர்மன் குலசேகரன் சிறப்பாக ஆட்சி புரிந்துகொண்டிருந்தான். இம்மன்னனின் புதல்வர்கள் ஜடாவர்மன் வீரபாண்டியன் என்ற கலியுகராமன், ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் ஆகியோர். இம்மன்னர்கள் காலத்திலேயே ஏகாம்பரநாதன் என்ற சம்புவராயனின் மகன் குலசேகர சம்புவராயன் இவர்களின் கீழ் பணிபுரிந்திருக்கின்றான். இவனைத் தொடர்ந்து இவன் வழிமுறையினர் பாண்டியர்களின் கீழ் பணி புரிந்திருக்கின்றனர்.

இந்த இரு பாண்டிய மன்னர்களுக்காகவும் கேரள வீரபாண்டிய னுடன் போரிட்டு வென்ற குலசேகர சம்புவரையன் 'செய்யாற்றில் வென்றான்' எனப் பெயர் பெற்றான். இதே குலசேகர சம்பு வரையன் வீரபாண்டியனுக்காகப் பல்லவ மன்னன் விஜயகண்ட கோபாலனுடன் போரிட்டு வென்று காஞ்சிபுர அரியணையிலிருந்து அவனை இறக்கிய பின் 'அந்தளில் வென்றான்' என்னும் பெயர் பெற்றான். பின்னர் கி.பி. 1324-இல் முகமதியர் படையெடுப்பினால் பாண்டிய அரசு வலிமை இழக்கவே, குலசேகர சம்புவரையனின் மகன் ஏகாம்பர நாதன் என்பவன் தன்னை ஒரு சுயாட்சி அரசனாக 'வென்று மண் கொண்ட சம்புவரையன்' என்ற பெயரில் பிரகடனப்படுத்திக் கொண்டான்.

ஒரு பக்கம் முகமதியர்களின் தொல்லை, மறு பக்கம் சம்புவரையர் சுயாட்சி. இந்நிலையில் பாண்டியர்களுக்கு உதவ வந்த வல்லாளனும் முகமதியருடன் கண்ணனூரில் நடந்த போரில் இறக்கவே, விஜய நகரப் பேரரசு பாண்டியர்களுக்கு உதவியது. சம்புவராயர்களை அடக்கியது. இரண்டாம் இராஜநாராயண சம்புவரையன், விஜய நகரப் படைவீரர்களால் கொல்லப்பட்டான். இவனது அண்ணன் முதலாம் இராஜநாராயண சம்புவரையன் வீரகம்பணனிடம் அடைக்கலமானான். அதனால் இராஜ்யத்தை அவனுக்கே திருப்பிக் கொடுத்து ஆளச் செய்தான் கம்பணன். இவ்வாறு இந்தச் சம்பு வரையர்கள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரை தமிழக வரலாற்றில் முக்கிய இடம் பெற்றிருந்தனர்.

அதிகாரிகளாக அரையர் என்ற பட்டத்துடன் வாழ்ந்த சிற்றரசர் களில் மூத்த அரையர்களாக வாழ்ந்து முத்தரையர் என்ற பெயர் பெற்ற சிற்றரசர்கள், நியமம், செந்தலை, தஞ்சைப் பகுதியில் அரசர்களாக ஆண்டு பேரரசர்களாகிய பாண்டியர்களுக்கும் பல்லவர் களுக்கும் இலக்காகத் திகழுமளவு சிறப்புப் பெற்றிருந்தனர். அதுபோல சம்பு+அரையர் என்று பெயர் பெற்று அதிகாரிகளாக விளங்கி பின்னர் அரசர்களாக மாறியவர்களே இந்த சம்புவராயர் களாகும். இவர்கள் தங்களைச் செங்கேணி வம்சத்தைச் சேர்ந்த வர்கள் என்று கூறிக்கொள்வது ஒரு கல்வெட்டின் மூலம் தெரி கிறது.

பேரரசை உருவாக்குவதிலும், நிலைக்கச் செய்வதிலும், வீழ்ச்சி யடையச் செய்வதிலும் பங்கு பெற்றிருந்த சிற்றரசர்கள் வரிசையில் சம்புவராயர்கள் கி.பி. 12, 13, 14-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்து, சோழர்களுக்குத் துணைபுரிந்து, அவர்கள் வீழ்ச்சியடையும் தரு வாயில் பாண்டியர்களுக்குக் கை கொடுத்து அவர்களும், வலிமை யிழக்கும் கால கட்டத்தில் தனியாட்சி செய்யும் மன்னர்களாக இயங்கிப், பின்னர் வடநாட்டு விஜயநகரப் பேரரசு, தென்னாட்டில் வலுப் பெறுகின்ற நேரத்தில், தாங்கள் நசுக்கப்படும்போது அவர் களின் ஆதரவை நாடி வாழ்ந்த சம்புவரையர் இனம், அக்காலக் கட்டங்களின் வரலாற்றுச் சூழல் உருவாக்கிய சிற்றரசர்கள் வரிசை யில் வரும் ஒரு முக்கிய இனத்தவர்களே என்பது நமக்குத் தெரிய் வருகிறது.

★

# சம்புவராயர் குறித்த ஓர் சுவடி

எஸ். சௌந்தரபாண்டியன், எம்.ஏ.
புலவர், கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள மெக்கன்சி (1754-1821) தொகுத்த சுவடிகளில் ஒன்று, சம்புவராயர் குறித்த வரலாற்றுக் குறிப்பை நல்குகிறது. இச்சுவடி, "சேத்துப்பட்டுத் துக்கடியில் திருவப்பாடி தேவஸ்தானம் வயலூரில் ஆதிநாராயண சம்புவராயருடைய புராதீனக் கோட்டையென்றதுகளின் விசேஷித்த கைபீது" என்ற தலைப்பில் உள்ளது (குறிப்பெண். டி. 3806). இத்தாள் சுவடியின் காலம் கி.பி 19-ஆம் நூற்றாண்டாகும்.

இச்சுவடியில் வரும் சம்புவராயர் பற்றி வில்லியம் டெய்லர் (1796-1878) குறிப்பு எழுதும்போது, "சோழர் அழிவுகளின் பின் எழுந்த குறுநில அரசர்களில் ஒருவராக இவரைக் கருதலாம்" என்று எழுதுகிறார் (A Catalogue of Mackenzie Manuscripts, vol. III, p. 410). இச்சுவடியில், புராண அடிப்படையிலான கருத்துக்களே மேலோங்கி நிற்கக் காண்கிறோம். இருப்பினும் சில வரலாற்றுக் கூறுகளை இதிலிருந்து அறிய முடிகிறது.

வயலூரில் (சேத்துப்பட்டு தாலுகா, வ. ஆ. மாவட்டம்) வீரநாராயண சம்புவராயன் என்பவன் ஒரு கோட்டை கட்டியிருந்தான்;

வீரநாராயணச் சம்புவராயரின் கோட்டை, செங்கல், கல் ஆகியவற்றால் ஆனது;

வீரநாராயணச் சம்புவராயர் ஒரு வைணவர்; இவர் வைணவ மதத்திற்குத் தொண்டு செய்தவர்;

வீரநாராயணச் சம்புவராயரின் கொடைகள் குறித்த கல்வெட்டுக்கள் உள;

வீரநாராயணச் சம்புவராயரின் தொண்டுகளில், குளம் வெட்டல், மண்டபம் அமைத்தல் ஆகியன அடங்கும்.

சுவடியின் வாசகம் வருமாறு :

"பூருவகாலத்திலே பராச ரிஷியும், மார்க்கண்ட ரிஷியும் பகவானுடைய தரிசனையாகி, அபிஷஞ் சித்திக்க வேணுமென்று இந்த சுதரிசின் பருபதத்துக்கு வந்து தபசு செய்துகொண்டிருக்கையில், வைகுண்டத்திலேயிருந்து லெஷ்சுமி சமேதராய், கெருடன் பேரிலேறிக்கொண்டு, இந்த ரிஷிகள் தபசு செய்கிற விடத்துக்கு வந்து பிரத்தியக்ஷமாயவர்களுடைய அபீஷஞ் சொல்லி அந்தப் பருவத்துக்கு மேலே தெற்கே தலைவைத்து மரக்காலைத் தலகாணியாக வைத்துக் கொண்டு ஐந்து தலையுடனே ரூபமெடுத்திருக்கிற ஆதிசேஷன் பேரிலே பள்ளிகொண்டு, இந்த லோகத்திலே ஜனங்களுக்கெல்லாந் தரிசனத்தினாலே மோக்ஷங்கொடுத்துக் கொண்டிருக்கையில், அப்போது சகல தேவதைகளும், ரிஷிகளும் பகவானுடைய தரிசனத்தினாலே மோக்ஷங் கொடுத்துக்கொண்டிருக்கையில், அப்போது, சகல தேவதைகளும் ரிஷிகளும் பகவானுடைய தரிசனத்துக்கு வந்து இந்தப் பருவதத்திலே இருந்து தபசுபண்ணிக்கொண்டு அவாளவாள் ஸ்தானத்துக்கு ஒவ்வொரு தீர்த்தம் மலையின்பேரிலே உண்டாக்கி, சுவாமியாரைப் பூசைசெய்து கொண்டிருந்தார்களாம். அந்தத் தீர்த்தங்களிலே இப்போது காணப்படுகிறது ஐந்து தீர்த்தம்; அவை ஐந்து தாவிலே சுனையாகி வெகு ஆழத்துடனே வடியாமலிருக்குது. மலைமேல் கோவிலுக்குக் கிழக்கே பிரமதீர்த்தம், மேற்கில் வராக தீர்த்தம், வாய்வு மூலையில் பள்ளத்தாவில் சாலிக்கிராம தீர்த்தம், வடக்குத் திக்கிலே நடுசருவில் லக்ஷிமி தீர்த்தம், அதற்கு மேல்வரிசைப் பாறையில் ஸ்ரீபாததீர்த்தம். அந்தத் தீர்த்தக் கரையில் அவருடைய பாதம் பதிஞ்சபடி காணப்படுகிறது. அந்தத் தீர்த்தத்துக்குள்ளேயும் அவருடைய பாதங் காணப்படுகிறதாம். இந்தத் தீர்த்தங்கள் தவிர, இன்னம் அநேக தீர்த்தங்கள் புராணத்தில் சொல்லியிருக்குதாம். அதுகள் கிலமாய்ப்போனதாய்க் காணப்படுகிறது. இந்த சுதரிசனை பருவதத்துக்குக் கிழக்கே அரைநாழிகை வழியில் வீரநாராயண சம்புவராயன் கோட்டை கட்டிக்கொண்டு, அதிலே சிறிது நாளிருந்து இந்தத் தேசங்களை ரக்ஷித்து, தேவாலயங்களுக்குத் திருப்பணி முதலானதுகளை நடப்பித்து, சிலாசாசனங்களாயி தருமங்களை நடப்பித்தாராம். அவனிருந்த கோட்டையிலே இப்போது செங்கக்கட்டுகளும் கல்லுகளும் காணப்படுகிறது. அவனுடைய அரண்மனை இந்தப் பருவதத்துக்கு மேற்கு அரை நாழிகை வழியில் கட்டியிருந்து அவ்விடத்திலேயும் செங்கல்கட்டுகள்

காணப்படுகிறது. அவ்விடத்திலேயொரு பெருமாள் கோவில் இருக்குது. அதற்குப் பூசை நின்றிருக்குது. அந்தப் பிரதேசமிப்போது வயலூரென்று பேருண்டாகி, கொஞ்சம் குடிகள் வீடு கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அதற்குக் கிழக்கே முன்னாலே சிவன் கோவிலிருந்து கிலமாய்ப் போய், இப்போது லிங்க மாத்திரங் காணப்படுகிறது. இந்த சுதரிசனை பருவதத்தின்மேல் கோவில் ரெங்கனாயகர் பள்ளிகொண்டிருக்கிற சுவாமி - 1; இதற்குத் தெற்கே ரெங்கனாயகி அம்மன்கோவில் - 1; வடக்கே சூடிக்கொடுத்த நாச்சியார் கோவில் - க; இந்த ரெங்கநாயகர் மலைக்குச் சுத்துவரிசை கீழே தேரோடுகிற வீதிகளும், அந்தந்தத் திக்கில் மண்டபங்களும் குளங்களும் காணப்படுகிறது. பூருவயுகத்தில் ராமாவதாரம் செய்த போது வானராள் ராமசுவாமியாரைத் தெரிசனம் பண்ணிக்கொண்டு வருகையில் சுவாமியார் வைகுண்டத்துக்குப் போகச்சே பக்தாளா யிருக்கிற வானராளையும் வைகுண்டத்துக்குக் கூட அழைத்துக் கொண்டு போகையில், சிறிது வானராள் சபலபுத்தியினாலே இந்தப் பூமியிலே நின்று போனவர்கள் எப்போதும் வானர யோனியில் செனித்துக் கொண்டு அந்தச் சுவாமியார் சயனம் பண்ணிக் கொண்டிருக்கிற ரெங்கஸ்தலங்களிலே இந்தக் கலியுகத்திலேயுமிந்த ரூபத்தையும் தெரிசனம் செய்துகொண்டு இருக்கிறதுகள். இப்போது இந்த மலையில் கொண்டமுச யென்று பேருண்டாயிருக்கிற வானரங்கள் வர்றதுகள் ரெம்பவும் தீர்க்கமாயும் முகங்கள் ரெம்பவும் கறுப்பாயும் விஸ்தரித்துக் காண்பிக்கிறது.
வெங்கட்டராயர் (கையொப்பம்)

இப்படிக்கு,
திருவாய்ப்பாடி கோவில் நம்பியானும்,
வெங்கடாசல முதலியும் எழுதிக்
கொடுத்த கைபீது.

★

# திருவக்கரைக் கோயிலில் சம்புவராயர் திருப்பணிகள்

வெ. இராமமூர்த்தி, எம்.ஏ., பி.எல்.,
கல்வெட்டாய்வாளர்

திருவக்கரை எனும் இவ்வூர் திண்டிவனம் புதுச்சேரி வழியில், புதுச்சேரியிலிருந்து 14 கி.மீ. தொலைவில் உள்ளது. திண்டிவனம் புதுச்சேரி பேருந்தில் சென்றால் மயிலம் கடந்து பெரும்பாக்கம் சாலை பிரியும் இடத்தில் இறங்கி எறையூர்-நெமிலி வழியாக 8 கி.மீ. சென்றால் திருவக்கரை கோயிலை அடையலாம்.

### திருவக்கரைக் கோயில்

இக்கோயில் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் பொலிவுற அமைந்துள்ளது. ஏழடுக்குகளைக் கொண்ட 85' உயர கோபுரம் எழுப்பப்பட்டுள்ளது. இக்கோயில் ஒரு பாடல் பெற்ற திருத்தலம். திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற பெருமை வாய்ந்தது. எனவே இக்கோயில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இருந்தே சிறப்புற விளங்கியிருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது.

மூன்று முகங்களுடைய சிவலிங்கமும்; இடது கையில் வில்லேந்திய காளியும், பெரிய சுற்றில் வைணவக் கோயிலும் இருப்பது இக் கோயிலின் தனிச்சிறப்பு ஆகும்.

### திருவக்கரை கோயிலுக்கு திருப்பணி செய்த மன்னர்கள்

திருவக்கரை கோயிலுக்கென்று தொன்றுதொட்டு பல மன்னர்கள் தேவதான நிலங்களை அளித்தும், சிறப்பான வழிபாட்டிற்கு வழி வகை செய்தும், கோயில் திருப்பணிகளை செய்து வந்துள்ளனர். அவர்களில் குறிப்பாக முதலாம் இராசராசன், இராசேந்திரன், விக்கிரமசோழன், முதலாம் குலோத்துங்கன், மாறவர்மன் விக்கிரம பாண்டியன், கோப்பெருஞ்சிங்கன், கிருஷ்ணதேவராயர், சதாசிவ ராயன், சம்புவராயர் (குறுநில மன்னர்) போன்றோர் பலவிதமான

கொடைகளையும், திருப்பணிகளையும் செய்துள்ளனர். இவர்களுள் சம்புவராயர்கள் இக்கோயிலுக்குச் செய்துள்ள கொடைகளையும், திருப்பணிகளையும் கல்வெட்டு ஆதாரங்களைக் கொண்டு ஆய்வு செய்வோம்.

**சம்புவராயர் திருப்பணிகள்**

**அ) கண்டர் சூரியன் சம்புவராயன்**

சோழ மன்னன் இரண்டாம் இராசாதிராசன் மற்றும் மூன்றாம் குலோத்துங்கன் ஆகியோரது ஆட்சியின்போது அவர்களது குறுநில மன்னராக இவர் செயல்பட்டுள்ளார் என்பது கல்வெட்டுத் தரும் ஆதாரமாகும். இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் அவன் திருவக்கரை கோயிலில் கட்டுவித்த அக்கோபுரத்திற்கு "கண்டர் சூரியன் திருக்கோபுரம்" எனும் பெயரிட்டுள்ளான். அதனைக் கீழ்க்கண்ட கல்வெட்டால் அறியலாம்.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ இரா
2 ஜாதிராசதெவற்கு யாண்டு ஏழாவது திருவக்கரை
3 ஆளுடையார்
4 கோயிலித் திருக்கோபுரங் கண்டர் சூரியன் திருக்கொ
5 புர மென்னும் பெயரால் செய்வித்தான் அம்மை
6 அப்பன் பாண்டிநாடு கொண்டானான கண்டர் சூரி
7 யன் சம்புவராயன்.

இவ்வாறு திருவக்கரை கோயிலில் தன் பெயரால் கோபுரம் எடுத்த இக்குறுநில மன்னன் மேலும் அக்கோயிலில் மூன்றாம் குலோத்துங்கனின் காலத்தில் திருமண்டபமும் எழுப்பியுள்ளான் என்பதனைக் கீழ் வரும் கல்வெட்டால் நாம் அறிய முடிகிறது.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனசக்கரவத்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொ[காண்ட]ருளின ஸ்ரீ குலோத்து
2 ங்கசொழ தெவற்கு யாண்டு 2-வது இராசஇராச வள நாட்டு உடையார் திருவக்கரை ஆளுடையார்
3 கொயிலில் இத்திருமண்டபம் கண்டர் சூரியன் திருமண்டபம் என்னும் பெயர

4 ால் செய்வித்தான் அம்மை அப்பன் பாண்டிநாடு கொண்டானான கண்டர் சூரி

5 யன் சம்புவராயன்

இத்திருமண்டபத்திற்கும் தன்னுடைய பெயரினையே இட்டுள்ளான் என்பதும் ஈண்டு நோக்கத்தக்கது. இவ்வாறு திருமண்டபமும், திருக்கோபுரமும் எழுப்பிச் சிறப்பித்தவன் மூன்றாம் குலோத்துங்கனின் 16-ஆம் ஆட்சியாண்டில் திருநொந்தா விளக்கினையும் வழங்கியுள்ளான். அந்த விளக்கின் எடையும், அமைப்பும், எதனால் செய்யப்பட்டது என்பதனையும் கல்வெட்டுத் தெளிவுபடக் கூறுகின்றது. அவையாவன

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் குலொத்துங்க சொழதெவற்கு யாண்

2 டு 14-வது உடையார் திருவக்கரை ஆளுடையார்க்கு அம்மை அப்பன் பா

3 ண்டிநாடு கொண்டானான கண்டர் சூரியன் சம்புவராயன் செய்வித்து இட்ட

4 ஐஞ்சு நிலைக் குத்தி விளக்கு ஊனால் இருப்புநாராசம் உட்பட தரா எடை ஆயிரத்து

5 நூற்று எண்பத்து இருபலம்''

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஐந்து நிலையும், ஆயிரத்து நூற்று எண்பத்து இருபலம் எடையும் கொண்ட இரண்டு விளக்குகள் இக்கோயிலுக்கு அளித்துள்ளான். திருவக்கரைக் கோயிலுக்குத் திருமண்டபமும் திருநொந்தாவிளக்கு இரண்டும் அளித்தான். இத்திருக்கோயிலுக் குத் தேவதானமாக நிலம் அளித்ததாக எந்தக் குறிப்பும் இல்லை.

## முஞ்ஞூற்று செங்கேணி

திண்டிவனம் வட்டத்தில் முஞ்ஞூறு எனும் பகுதியில் சிறந்து விளங்கியவர்கள் சம்புவராயர்களாவர். ஒய்மாநாடான விஜய ராசேந்திர வளநாட்டு முஞ்ஞூற்றுக் குடிப்பள்ளி செங்கேணி அம்மை யப்பன் பாண்டியான நரலோக விழுப்பரைடன் எனும் ஒருவன் இருந்து இருக்கிறான். பின்னாட்களில் இவர்கள் அப்பகுதியினின்று தன் எல்லையைப் பெருக்கிக் கொண்டனர்.

இராசாதிராசன் காலத்து குறுநில மன்னர்களாக இருந்த முஞ்னூற்றுச் செங்கேணி சீம்புவரீராயர்கள் இக்கோயிலுக்குத் தேவதானமாக வழங்கிய நிலம் பற்றியும், ஏனைய செய்திகளையும் திருவக்கரையில் உள்ள மற்றொரு கல்வெட்டு விளக்குகிறது எனினும், இக்கல்வெட்டு முழுதுமாக கிடைக்கப் பெறவில்லை.

சம்புவராயர்கள் சோழ மன்னர்களுக்குக் கீழ் குறுநில மன்னர் களாக இருந்தாலும், கோயில் திருப்பணிகளிலும், கோயில்களுக்குத் தானங்கள் அளிப்பதிலும் சிறந்து விளங்கினார்கள் என்பதைத் திருவக்கரைக் கோயில் கல்வெட்டுக்களால் அறிந்து கொள்ள இயலுகிறது.

★

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் அச்சகத்தில் அச்சிட்டு இத்துறை இயக்குநருக்காக திருமதி. மார்க்சியகாந்தி, கல்வெட்டாய்வாளரால் வெளியிடப்பெற்றது.